3. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள், நிறைய கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் ஏற்கெனவே எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கின்றன. அது உங்களுக்கே தெரியும். நீங்கள் கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுத்திருக்கின்றீர்கள். அது துறைக்கு நடவடிக்கை எடுப்பதற்காக அனுப்பப்பட்டிருக்கிறது. துறையிலிருந்து பதில் பெற்றவுடன், அதை எடுத்துக்கொள்வது பற்றிப் பரிசீலிக்கப்படும். (குறுக்கீடு)* Please sit down. *துறையின் நடவடிக்கையில் இருக்கிறது. பதில் வந்தவுடன், நான் அதை எடுத்துக்கொள்கிறேன்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைச் சார்ந்த தமிழர், சட்டீஸ்கர் மாநிலத்தில் மாவட்ட ஆட்சியராக இருக்கிற அலெக்ஸ் பால் மேனன் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள், காலையில்தான் என் அறையில் வந்து இதுகுறித்து என்னிடம் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அதைத் துறைக்கு அனுப்பி இருக்கிறேன்.* Please sit down.

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒடிசா மாநிலத்தில் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதே பிரச்சினை குறித்துதானே? காலையில்தான் என்னிடம் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) காலையில் நீங்கள் கொடுத்தவுடன், நடவடிக்கைக்கு துறைக்கு அனுப்பி இருக்கிறேன். துறையிடமிருந்து பதில் வந்தவுடன், அதை நான் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

செல்வி கே. பாலபாரதி: *சட்டீஸ்கர் மாநிலத்தில் நமது தமிழர் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதுகுறித்து காலையில்தானே நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள்? உட்காருங்கள்.*

செல்வி கே. பாலபாரதி: *நேற்றுதான் கடத்தினார்கள். இன்றைக்குத்தான் அதுகுறித்து அறிவிப்புக் கொடுக்க முடியும். மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். வேறு ஒன்றும் இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, உட்காருங்கள்.*

4. அறிக்கைகள் அளித்தல்

மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மோகன், மனுக்கள் குழுவின் தலைவர்.*

திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிந்து, தொட்டு வணங்கி, 2011–2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மனுக்கள் குழுவின் ஏழாவது மற்றும் எட்டாவது அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.*

5. மானியக் கோரிக்கைகள், 2012–2013, விவாதமும் வாக்கெடுப்பும் தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 12 கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

ஆ) கோரிக்கை எண் 13–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

(அ) கோரிக்கை எண் 12–கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2012–2013 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 12–கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை), மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*